# தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம் - 2012

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 சிறந்த கணக்கீட்டு நடைமுறைகள்

சிறந்த கணக்கீட்டு நடைமுறைகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் அகற்றப்பட்ட ஆதனம், பொறி, உபகரணம் என்பவற்றை நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக வெளிப்படுத்த வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4,250,078 மொத்தமான நிலையான சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் நிறுவனத்திற்குச் சொந்தமான 6.09 பேர்ச் காணி சுவீகரிக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக ரூபா 21,703,500 பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் மருத்துவ நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் அக் காணியின் புத்தகப் பெறுமதியினை கணக்குகளிலிருந்து அகற்றி நிறுவனத்திற்கு ஏற்பட்ட இலாபம் அல்லது நட்டம் இனங்கண்டு கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய இரண்டு செலவின விடயங்களிற்காக ரூபா 1,074,564 அதிகரித்தும், ஒரு செலவின விடயத்திற்காக ரூபா 100,000 குறைத்தும், அட்டுறுச் செலவினம் ஒதுக்கப்பட்டிருந்தமை காரணமாக ஆண்டிற்கான மிகை ரூபா 974,564 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் உள்ளக கணக்கு மிதிகள் காண்பிக்கப்படக் கூடாத போதிலும், தலைமை அலுவலகத்திலுள்ள கிளையுடனான நடைமுறைக் கணக்கு மற்றும் கிளைகளிலுள்ள தலைமை அலுவலகத்துடனான நடைமுறைக் கணக்குகளிலுள்ள ரூபா 89,167,040 தொகையான வரவு மற்றும் செலவு மீதிகளை ஒன்றுக்கொன்று எதிரீடு செய்யப்படுதல் வேண்டும். இருப்பினும், அம்மீதிகள் நிதிக்கூற்றுக்களின் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2.3 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

கிளைகளில் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் இடர்கடன் பதிவேட்டிற்கும் நிதிக்கூற்றுக்களிற்கும் இடையில் ரூபா 637,446 வேறுபாடு சரிசெய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 பெறவேண்டிய வருமானம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை இலங்கை போக்குவரத்துச் சபையின் ஊழியர்களிற்காக மருத்துவச் சேவைகளை வழங்கியமைக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 3,312,650 தொகை 2013 ஒக்தோபர் மாத இறுதி வரைக்கும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 யூன் 01 முதல் 2011 மே 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்கு குருநாகல் கிளைக்காக கட்டிடமொன்று வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்த போதிலும், அக்காலப்பகுதி முடிவடையும் முன்னர் அதாவது 2010 திசெம்பர் 31 ஆந் திகதி முதல் அக்கிளை வேறோர் இடத்திற்கு கொண்டு

செல்லப்பட்டிருந்தமையால் ரூபா 87,500 ஆன பிணை வைப்பு 2013 ஒக்தோபர் மாதம் வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 1.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் கணக்கு விடயங்களுக்கு எதிரே காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| | கணக்கு விடயம் | கணக்கின் மீதி<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் | 69,176,686 | பொருள் மெய்மையாய்வு அறிக்கை |
| (ஆ) | இருப்பு மீதி | 6,050,388 | இருப்பு மெய்மையாய்வு அறிக்கை |
| (இ) | கடன்பட்டோர் | 4,030,546 | (i) மீதிகளை உறுதிப்படுத்தல்<br>(ii) காலப் பகுப்பாய்வு |

### 1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் | |
| (i) நிதி அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 8.2.2 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் போது நியைான வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டியல்களில் முறையே ரூபா 27,281,106 மற்றும் ரூபா 190,645,275 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்காக நிதி அமைச்சரின் |

| | |
|---|---|
| | இணக்கத்துடன் உரிய அமைச்சரின் அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக் கவில்லை. |
| (ii) நிதி அதிகாரச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 6.5.3 ஆம் பிரிவு | 2011 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை 2013 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தில் முன்வைக்கப் பட்டிருக்கவில்லை. |

(ஆ) பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள்

| | |
|---|---|
| (i) 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 31/2008 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி மற்றும் 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | ஒரு உத்தியோகத்தருக்குச் செலுத்த வேண்டிய உச்ச பண்டிகை முற்பணம் ரூபா 5,000 எல்லையாக இருந்தபோதிலும், ரூபா 25,000 வீதம் செலுத்தப்பட்டிருந்தமை காரணமாக மீளாய்வாண்டில் ரூபா 1,960,000 தொகை மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) 2011 திசெம்பர் 31 ஆந் திகதிய 27/2011 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி மற்றும் 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | ஒரு உத்தியோகத்தருக்குச் செலுத்த வேண்டிய உச்ச அளவு விசேட முற்பணம் ரூபா 2,500 எல்லையாக இருக்க வேண்டிய போதிலும், ரூபா 25,000 வீதம் செலுத்தப்பட்டிருந்தமை காரணமாக மீளாய்வாண்டில் ரூபா 2,165,000 தொகை மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவை

| | |
|---|---|
| (i) நி.பி 396(ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையும் வழங்கப்பட்ட 06 மாத காலத்தினை விஞ்சிய ரூபா 80,832 பெறுமதியன 07 காசோலைகள் தொடர்பாக நி.பி. இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| | (ii) நி.பி 757(2)(ஆ) | மெய்மையாய்வுச் சபை அறிக்கையின் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) நி.பி. 762 | நிறுவனத்தின் முக்கியமான இருப்புத் தேவையான அச்சிடப்பட்ட மருத்துவச் சான்றிதழ்கள் மற்றும் ஆய்வுகூட இருப்புகக்ள் தொடர்பில் இருப்பு மட்டங்களை தீர்மானிப்பதற்கு நிறுவனத் தினால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | |
| | (i) தாபன விதிக் கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் 1.3 ஆம் பிரிவு | கடமை ரீதியான பயணங்களில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்காக இணைந்த படிகளுக்கு மேலதிகமாக மீளாய்வாண்டில் தங்குமிடத்திற்காக ரூபா 227,453 தொகையும் உணவிற்காக ரூபா 46,180 தொகையும் நிறுவனத்தினால் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தன. |
| | (ii) XV ஆம் அத்தியாயத்தின் 10 ஆம் பிரிவு மற்றும் 2006 பெப்ரவரி 10 ஆந் திகதிய சீஎஸ்ஏ/01/01/2006 ஆம் இலக்க சனாதிபதிச் செயலகத்தின் சுற்றறிக்கையின் முதலாவது பந்தி | போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தின் மருத்துவர் ஒருவர் பிரதமரின் அங்கீகாரத் தினைப் பெற்றுக்கொள்ளாது வெளிநாடு சென்றிருந்தார். |
| (உ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்று நிருபத்தின் 8.3.3 (சீ) பிரிவு மற்றும் 2012 திசெம்பர் 24 ஆந் திகதிய 49 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | உபகாரப் படி மற்றும் ஊக்குவிப்புக் கொடுப்பனவு என்ற இரண்டிலும் ஒன்றை மாத்திரமே செலுத்த முடிந்திருந்த போதிலும், மீளாய்வாண்டில் உபகாரப் படியாக ரூபா 935,000 தொகையும் ஊக்குவிப்புக் கொடுப்பனவு ரூபா 467,500 |

| | | |
|---|---|---|
| | | தொகையும் செலுத்தப்பட்டிருந்தன. இந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவிற்காக முறையான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2008 யூலை 28 ஆந் திகதி பீஈடீ/50 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 3 ஆம் பந்தி மற்றும் 2011 பெப்ரவரி 09 ஆந் திகதிய 13/2008(iv) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | (i) தலைவருக்கு உரித்தான மாதாந்த எரிபொருள் 140 லீற்றர்கள் மாத்திர மேயான போதிலும், மீளாய்வாண்டின் 06 மாதங்களில் எல்லையினை விஞ்சி 603.7 லீற்றர்கள் எரிபொருள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.<br>(ii) மாதாந்த எரிபொருள் படியினைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்தற்ற III ஆம் வகுப்பு கணக்காளர் ஒருவருக்கு மாதாந்தம் ரூபா 12,500 வீதம் ரூபா 150,000 எரிபொருள் படி ஆண்டில் செலுத்தப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தின் பற்றாக்குறை, நேரொத்த முன்னைய ஆண்டிற்காக மிகை ரூபா 45,668,769 இற்கு எதிராக ரூபா 13,979,214 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 59,647,983 தொகையான வீழ்ச்சிக்கு, மருத்துவ சேவை வருமானம் ரூபா 41,610,027 ஆல் குறைவடைந்திருந்தமை மற்றும் படிகள் ரூபா 15,491,569 ஆல் அதிகரித்திருந்தமை பிரதான காரணிகளாக பங்களித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

கணக்காளரினால் 2010 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 1/2010 ஆம் இலக்க வியாபார தீர்வைகள் மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் சுற்றறிக்கையின் கீழ் தீர்வையற்ற மோட்டார் வாகன இறக்குமதி உத்தரவுப் பத்திரத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டிருந்ததுடன்

அதனைப் பெற்றுக்கொள்வதற்கு அவரது சேவைக்காலம் போதியதாக காணப்படாமையால் அதனைப் பெற்றுக் கொள்ளக்கூடிய விதத்தில் பணிப்பாளர் சபையால் அவரது நியமனம் இரண்டு ஆண்டுகள் முற்போடப்பட்டிருந்தது.

### 3.2 பதவியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2008 ஆம் ஆண்டில் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தினால் போக்குவரத்து மருத்துவ நிறுவனத்திற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணியினரை 2012 ஒக்தோபர் 31 இல் காணப்பட்ட உள்ளபடியான பதவியணியினருடன் ஒப்பிடுகையில் 86 உத்தியோகத்தர்கள் மிகையாகவும் 24 உத்தியோகத்தர்கள் குறைவாகவும் காணப்பட்டனர்.

(ஆ) போக்குவரத்து மருத்துவ நிறுவனத்திற்காக 2010 ஆம் ஆண்டில் உத்தேசிக்கப்பட்டிருந்த புதிய பதவியணியினர் மற்றும் அமைப்பு வரைபடம் என்பன 2012 நவம்பர் 20 ஆந் திகதி பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.2 (டீ) பிரிவின் பிரகாரம் புதிய அமைப்பு வரைபடமும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் பொது முயற்சிகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்திற்காக தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஆட்சேர்ப்பு, பதவியுயர்த்துதல் நடைமுறைகளிற்காக பொதுத் திறைசேரியினதும் பொது முயற்சிகள் திணைக்களத்தினதும் இணக்கப்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.10 ஆம் பிரிவின் பிரகாரம் திறைசேரியின் அங்கீகாரமின்றி அங்கீகரித்த பதவியணியில் இல்லாதிருந்த நிர்வாக ஆலோசகர் பதவிக்காக பணிப்பாளர் சபையின் உறுப்பினர் ஒருவர் 2011 திசெம்பர் 01 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டு மீளாய்வாண்டில் படிகளாக ரூபா 349,650 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.3.1 ஆம் பிரிவின் பிரகாரம், நிதியாண்டு தொடங்குவதற்கு குறைந்தது 15 நாட்களிற்கு முன்னர் கூட்டிணைந்த திட்டம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2011-2013 காலப்பகுதிக்கான கூட்டிணைந்த திட்டம் 2011 நவம்பர் 29 ஆந் திகதியன்றே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 4.2 கொள்வனவுத் திட்டம்

அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 4.2 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டிற்கான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளுடன் உள்ளபடியான மீதிகளை ஒப்பீடு செய்கையில் 38 சதவீதம் முதல் 93 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் அது பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 05. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள்
(ஆ) ஊழியர் கடன்
(இ) கடன்பட்டோர்
(ஈ) இருப்புக்கட்டுப்பாடு
(உ) பதவியினர் நிர்வாகம்
(ஊ) பாதீட்டுக் கட்டுப்பாடு